**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 07/2017**

2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20–ம் நாள் புதன்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 20.082025 | தகப்பனார் பெயர்: | ரெங்கசாமி |
| பெயர்: | ரெங்ககிரி<br>(PW–1 Cross ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | திருநகரி | சமயம்: | |
| தொழில்: | | வயது : | 72/2025 |

**<u>1, 3 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 20.08.2025</u>**

**(ஆரம்பித்த நேரம்–12.20)**

1. நான் இன்பசேகர் என்பவரிடம் கடந்த 26.04.2004 அன்று ஏற்படுத்திக்கொண்டது ஒப்பந்த ஆவணம் தான் என்றால் அவரிடம் உள்ள உரிமையை எனக்கு விட்டுக்கொடுத்துவிட்டார். அவர் என்னிடம் ஒப்பந்தம் தான் ஏற்படுத்தினாரே தவிர உரிமை மாற்றம் எதுவும் ஏற்படுத்திக் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் நான் குத்தகை உரிமை ஏதும் தாவா சொத்தை பொறுத்து கோர முடியாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தின் 3 வது பக்கத்தில், மணலி எஸ்டேட்டில் இதனடியில் கண்ட நிலத்திற்கான உரிமைக்கு 1வது பார்ட்டிகள் தேவைப்படின் நேரடியாக ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டியது என்று கண்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துகளைப் பொறுத்து மணலி எஸ்டேட்டிடம் குத்தகைக்கு நான் எவ்வித ஒப்பந்தமும் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. தாவா சொத்துகளைப் பொறுத்து எனது பெயரில் குத்தகை உரிமை மாற்றம் ஏதும் மனு கொடுத்து இந்நாள் வரை செய்யப்படவில்லை என்றால் சரிதான். மணலி எஸ்டேட்டிடம் நான் குத்தகை ஏதும் செலுத்தி இருக்கிறேனா

என்றால் செலுத்தியுள்ளேன். நான் அவ்வாறு குத்தகை செலுத்தியதற்கான எவ்வித ஆவணமும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பணமாக கொடுத்தேன், ஆனால் ரசீது கொடுக்கப்படவில்லை. பொதுவாக குத்தகை உரிமையாளர்கள் குத்தகை செலுத்தினால் அதற்கான ரசீது கொடுப்பார்கள் என்றால் சரிதான். நான் தாவா சொத்திற்கு குத்தகை செலுத்தாததால் தான் எனக்கு குத்தகை ரசீது வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல.

3. மணலி எஸ்டேட்டிற்கு தற்போது குத்தகை வசூலிப்பது பாஸ்கர் என்பவர் என்றால் சரிதான், ஆனால் அவர் ஏஜென்ட் கிடையாது. அவரிடம் நான் குத்தகை ஏதேனும் செலுத்தினேனா என்றால் நான் காசோலையாக கொடுத்தேன், அவர் வாங்க மறுத்துவிட்டார். நான் நிலத்தை குத்தகை சாகுபடி செய்தால் தான் என்னிடம் இருந்து குத்தகை வசூலிப்பார்கள், இல்லை என்றால் வசூலிக்கமாட்டார்கள் என்றால் பாஸ்கர் பணமாக கொடுத்தால்தான் வாங்குவேன் என்றார், நான் மறுத்தவிட்டேன். காசோலையாக தான் கொடுப்பேன் என்று கூறிவிட்டேன். குத்தகை வாங்க மறுத்தது சம்மந்தமாக சட்டரீதியாக நடவடிக்கை ஏதும் நான் எடுத்தேனா என்றால் இல்லை. உண்மையாக நான் குத்தகை சாகுபடி செய்திருந்தால் குத்தகை செலுத்துவது சம்மந்தமாக நடவடிக்கை எடுத்திருப்பேன், சாகுபடியில் இல்லாததால் தான் நான் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

4. இன்பசேகர் என்பவருக்கு தாவா சொத்துக்கள் எவ்வாறு பாத்தியப்பட்டது என்பதற்காக ஆவணங்கள் ஏதும் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்களுக்கான குத்தகை உரிமை பதிவேடு 3ம் பிரதிவாதியான பாஸ்கர் பெயரில் உள்ளது என்றால், குத்தகை உரிமை பதிவேடு குறித்து நான் வட்டாட்சியர் அலுவலகத்தில் கேட்டபோது அத்தகைய பதிவு இல்லை என்று கூறிவிட்டனர். 1 மற்றும் 3 ம் பிரதிவாதிகள் அவர்களது எதிர்வழக்குரையில் குத்தகை உரிமை பதிவேடு அவர்களது பெயரில் உள்ளது என்று கூறியுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 3ம் பிரதிவாதி

பெயரில் உள்ள குத்தகை உரிமை பதிவேடு செல்லாது என்று நான் எவ்வித பரிகாரமும் இவ்வழக்கில் கோரவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் 1 மற்றும் 3 ம் பிரதிவாதிகளின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. 1 மற்றும் 3 ம் பிரதிவாதிகள் தாவா சொத்தில் குத்தகை சாகுபடி செய்து மணலி எஸ்டேட்டிற்கு குத்தகை செலுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு தெற்கு பக்கத்தில் எனக்கு சொந்தமான நிலம் உள்ளது என்றால் சரிதான்.

5. நான் மெயின்ரோட்டிற்கு வரவேண்டும் என்றால் தாவா சொத்துக்களின் வழியாக தான் வரவேண்டும் என்றால் சரிதான். தாவா சொத்து எனக்கு பயன்பாட்டிற்கு தேவைப்படும் என்பதால் தாவா சொத்து என்னிடம் உள்ளது போல் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. திருநகரி கிராமத்தில் எனக்கு சொந்தமாக சுமார் 10 ஏக்கர் நிலம் இருக்கும். நான் அந்த ஊரைப் பொறுத்தவரை முக்கிய நிலச்சுவான்தார் என்றால் சரிதான். எனக்கு தாலுக்கா அலுவலகம், VAO அலுவலகம் இவற்றில் செல்வாக்கு உள்ளது என்றால், எனக்கு வேலை இருந்தால்தான் நான் அங்கு செல்வேன். எனக்குள்ள செல்வாக்கை வைத்து கிஸ்தி ரசீது, சிட்டா அடங்கல் வாங்கி நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

6. நான் வழக்கு தாக்கல் செய்துள்ளது 10 மா நிலம். ஆனால் தாவா சர்வே எண்–614/1 ல் 9 மா நிலம் தான் இருக்கிறது என்றால், நான் அளந்து வாங்கவில்லை குத்துமதிப்பாக தான் வாங்கினேன். நான் உண்மையிலேயே தாவா சொத்தில் அனுபவத்தில் இருந்திருந்தால் உண்மையான பரப்பளவு எனக்கு தெரிந்திருக்கும், நான் அனுபவத்தில் இல்லாததால் தான் பரப்பளவு எவ்வளவு என்று சரியாக கூறவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண்–614/1 ஐ ஒட்டியே சர்வே எண்– 614/3 ல் 55 சென்ட் நிலம் உள்ளது என்றால், இல்லை அது தனியாக தான் உள்ளது. சர்வே எண்– 614/1 ம் 614/3 ம் ஒன்றாக தான் உள்ளது என்றால் சரியல்ல.

7. தாவா சொத்தில் நான் அனுபவத்திலும் இல்லை, பிரதிவாதிகள்

ஆக்கிரமிக்கவும் இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் பிரதிவாதிகள் பண பல, படை பலம் உள்ளவர்கள் இல்லை, நான்தான் பண பல, படை பலம் உள்ளவர் என்றால் சரியல்ல. திருநகரியைச் சேர்ந்த கோபாலகிருஷ்ணன் என்பவர் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், அவர் என்னிடம் வேலை பார்த்தவர். நான் கோபாலகிருஷ்ணனை தூண்டிவிட்டு 1ம் பிரதிவாதியின் அனுபவத்தை சீர்குலைக்க முயற்சி செய்ததால், 1ம் பிரதிவாதி இந்த நீதிமன்றத்தில் அ.வ. எண்– 212/2016 என்ற வழக்கு தொடர்ந்தார் என்றால் சரியல்ல. அதன்பிறகு தான் தயார் செய்யப்பட்ட மோசடியான ஆவணங்களை கொண்டு நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து எனது அனுபவத்திலும் வசத்திலும் இல்லாத காரணத்தால் நான் கோருகிற பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. எனது வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 12.53)**